www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை**
**நிலை 3 – உகரம்**
**தமிழ் விருப்ப மொழி – மாதிரி வினாத்தாள்**

காலம்: 1.30 மணி நேரம் மொத்த மதிப்பெண்: 100

**பகுதி – 1 கேட்டல் திறன்** (5 X 2 = 10)

**I. நீங்கள் கேட்ட பத்தியிலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

முதியவர் ஒருவர் மரக்கன்று ஒன்றை நட்டு, நீர் ஊற்றினார். அதனைக் கண்ட சிறுவன், 'தாத்தா உங்களுக்கு வயதாகி விட்டது. இந்த மரம் வளர்ந்து பழம் கொடுக்கும்போது நீங்கள் அதன் பயனைப் பெற முடியாது; பிறகு ஏன் இதனை வீணாய் நடுகிறீர்கள்?' என்றான். அதற்கு அம்முதியவர் 'அதோ பார்! அந்த மரத்தை நான் நடவில்லை. என் முன்னோர் நட்டு வைத்தனர். ஆனால், அதன் பழங்களை நான் சாப்பிடுகிறேன். அதைப் போல் நான் நட்டு வைக்கும் இம்மரக்கன்று, எனக்குப் பிறகு வரும் உன் போன்றவருக்குப் பயன் தருமே' என்றார். அப்போதுதான் அச்சிறுவனுக்கு முதியவர் செய்யும் செயலின் அருமை பெருமை புரிந்தது.

1. முதியவர் என்ன செய்து கொண்டிருந்தார்?
   அ) மரக்கன்றை நட்டுக்கொண்டிருந்தார் ஆ) சாப்பிட்டுக் கொண்டிருந்தார்
   இ) தூங்கிக் கொண்டிருந்தார் ஈ) நடந்து கொண்டிருந்தார்
2. கதையில் இடம் பெற்றுள்ள இணைமொழி எது?
   அ) வளமை செழுமை ஆ) அருமை பெருமை
   இ) உடலும் உயிருமாய் ஈ) கண்ணும் கருத்துமாய்
3. 'ஏன் இதனை வீணாய் நடுகிறீர்கள்' என்று கேட்டது யார்?
   அ) பேரன் ஆ) பேத்தி
   இ) முதியவர் ஈ) சிறுவன்

ஒரு நாட்டின் பண்பாடு என்பது மக்களின் உணவு, உடை, பழக்கவழக்கம், விளையாட்டு போன்றவற்றைக் குறிக்கும். ஜப்பான் நாட்டின் உணவு முறைகள் சிலவற்றைக் காண்போம். ஜப்பானியப் பாரம்பரிய உணவு வகைகளை 'வாஷோகு' (Washoku) என்று அழைப்பர். அவர்களின் உணவில் அரிசி, மீன், பச்சைக் காய்கறிகள் ஆகியவை முதன்மை இடத்தைப் பெறுகின்றன.

4. ஒரு நாட்டு மக்களின் உணவு, உடை, பழக்கவழக்கம், விளையாட்டு போன்றவற்றைக் குறிப்பது எது?
   அ) அணுகுமுறை ஆ) பண்பாடு
   இ) உணவுமுறை ஈ) ஒருமைப்பாடு
5. ஜப்பானியர் உணவில் முதன்மை பெறுவது எது?
   அ) பருப்பு ஆ) நெய்
   இ) கிழங்கு ஈ) அரிசி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி – 2

II. **சரியான விடையைத் தேர்வு செய்து குறித்தல்.** (20 x 2 = 40)

1. நம் கருத்தைப் பிறருக்கு உணர்த்த உதவும் கருவி
அ) மொழி ஆ) நாடு இ) குடும்பம் ஈ) பயணம்
2. நெல்சன் மண்டேலா யாருடைய உரிமைக்காகப் போராடினார்?
அ) விளையாட்டு வீரர்கள் ஆ) அரசன் இ) மக்கள் ஈ) அதிகாரிகள்
3. இளமைப் பருவத்திற்கு உரிய கடமை எது?
அ) பணம் ஆ) புகழ் இ) செல்வம் ஈ) கல்வி
4. மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலைப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்த அமைப்பு எது?
அ) சட்டப் பேரவை ஆ) கின்னஸ் இ) நாடாளுமன்றம் ஈ) யுனெஸ்கோ
5. தொல்காப்பியர் உயிர்களை எதன் அடிப்படையில் பகுத்துள்ளார்?
அ) மெய் ஆ) புலன் உணர்வு இ) சிந்தனை ஈ) மனம்
6. 'உடலில் உறுதி உடையவரே! உலகில் இன்பம் உடையவராம்' – எனப் பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கவிமணி ஈ) திருமூலர்
7. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர் யார்?
அ) வள்ளலார் ஆ) திருமூலர் இ) கம்பர் ஈ) பாரதியார்
8. 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் ___________'
அ) படைத்த அரசு ஆ) காத்த அரசு இ) வல்லது அரசு ஈ) வளர்த்தது அரசு
9. '_______ என இரத்தல் இழிந்தன்று'
அ) நீ ஆ) ஈ இ) பூ ஈ) ஐ
10. 'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்' – என்ற பாடல் அடியில் எது அழிந்தால் எது அழியும் என்று திருமந்திரம் கூறுகிறது?
அ) ஆன்மா, உயிர் ஆ) சிரம், புறம் இ) இதயம், மூளை ஈ) உடம்பு, உயிர்
11. பொறுத்தார் அடைவது எது?
அ) இகழ் ஆ) புகழ் இ) மகிழ் ஈ) இகல்
12. மக்கட் பண்பு இல்லாதவரை எதனுடன் திருவள்ளுவர் ஒப்பிட்டுள்ளார்.
அ) மரத்துடன் ஆ) செடியுடன் இ) பறவையுடன் ஈ) கொடியுடன்
13. படிக்கிற மாணவன். இதில் 'படிக்கிற' என்பது
அ) குறிப்புப் பெயரெச்சம் ஆ) நிகழ்காலப் பெயரெச்சம்
இ) இறந்த காலப் பெயரெச்சம் ஈ) எதிர்காலப் பெயரெச்சம்
14. 'போல' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) வேற்றுமை உருபு ஆ) விகுதி இ) சுட்டு எழுத்து ஈ) உவம உருபு
15. கிளியின் ______ சிவப்பு நிறம்
அ) அழகு ஆ) அளகு இ) அலகு ஈ) அல்கு
16. வயல் என்பதன் வேறு சொல்
அ) பழனம் ஆ) பழம் இ) பள்ளம் ஈ) அயல்

17. ஆசிரியர் பாடம் _________.

அ) நடந்தார் ஆ) நடத்தினார் இ) நடக்கிறார் ஈ) நடப்பார்

18. நீர், தீ, வளி, நிலம், ஆகாயம் ஆகியவற்றின் தொகைச்சொல்

அ) ஐந்திலக்கணம் ஆ) ஐவகை நிலம் இ) ஐம்பூதம் ஈ) ஐம்பால்

19. ஆணி + வேர் = ஆணிவேர். இது எவ்வகைப் புணர்ச்சி

அ) இயல்பு புணர்ச்சி ஆ) தோன்றல் புணர்ச்சி

இ) கெடுதல் புணர்ச்சி ஈ) விகாரப் புணர்ச்சி

20. விரைவு உணவு என்பதன் ஆங்கில மொழியாக்கம்

அ) Preserved food ஆ) Readymade food இ) Waste food ஈ) Fast food

**III. சரியா? தவறா? எனக் குறிப்பிடுக.** (10 x 2 = 20)

1. 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்று கூறியவர் கம்பர். சரி / தவறு
2. பண்டைத் தமிழர்கள் தரைவழியாகவும், கடல்வழியாகவும் வாணிகம் செய்தனர். சரி / தவறு
3. பழந்தமிழர்கள் தம் வாழ்வியலில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவில்லை. சரி /தவறு
4. மஞ்சள் காமாலை நோய்க்குச் சிறந்த மருந்து கீழாநெல்லி. சரி /தவறு
5. 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று ஔவையார் பாடியுள்ளார். சரி /தவறு
6. 'ஓடும் குதிரை' – இதில் 'ஓடும்' என்பது இறந்தகாலப் பெயரெச்சம். சரி /தவறு
7. 'ஆறப் போடுதல்' என்னும் மரபுத் தொடரின் பொருள் காலம் தாழ்த்துதல். சரி / தவறு
8. 'மதி' என்னும் சொல் சூரியனைக் குறிக்கும். சரி /தவறு
9. தமிழ் + பாடம் = தமிழ்ப் பாடம். இது விகாரப் புணர்ச்சி சரி / தவறு
10. Palm Leaf Manuscript என்பதன் தமிழாக்கம் ஓலைச் சுவடி. சரி /தவறு

## பகுதி – 3

**IV. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.** (6 x 5 = 30)

**1. பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, அதன் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் சில மொழிகள் தொன்மை, தனித்தன்மை, உயர்சிந்தனை ஆகிய தகுதிகளைப் பெற்று, செம்மொழிகளாகத் திகழ்கின்றன. தமிழ், சமஸ்கிருதம், இலத்தீன், சீனம், கிரேக்கம், எபிரேயம், பெர்சியன் மற்றும் அரபிக் ஆகிய எட்டும் உலகச் செம்மொழிகள். இந்திய மொழிகளில் தமிழைத் தொடர்ந்து சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளுக்கும் இந்திய அரசு செம்மொழித்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தகுதி வழங்கியுள்ளது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனத் தமிழ் மொழி, முத்தமிழாய் விளங்குகிறது. தமிழில் இலக்கிய இலக்கண நூல்கள் மிகுதியாக உள்ளன.

**வினாக்கள் :**

1. செம்மொழியின் சிறப்புகள் என்ன?
2. பிற நாட்டுச் செம்மொழிகளுள் ஒன்றன் பெயரைக் குறிப்பிடுக.
3. இந்தியச் செம்மொழிகள் எவை?
4. உலகச் செம்மொழிகள் எவை ?
5. முத்தமிழ் எவை?

2. தமிழர்களின் உணவுமுறை குறித்து ஐந்து தொடர்களுக்குக் குறையாமல் எழுதுக.

3. கீழடி அகழாய்வு குறித்து ஐந்து தொடர்களுக்குக் குறையாமல் எழுதுக.

4. பொருத்தமான இடைச்சொற்களை நிரப்பித் தொடரை முழுமையாக எழுதுக.

**(ஆர், ஆல், கு, போல, ஐ)**

1. முருகன்/மரக்கன்று / நட்டான்.

   ------------------------------------------------
2. வெண்மணி/குயில்/பாடினாள்.

   ------------------------------------------------
3. வள்ளி/ஊசி/தைத்தாள்.

   ------------------------------------------------
4. மாறன் கடற்கரை/சென்றான்.

   ------------------------------------------------
5. ஆசிரியர்/பாடம்/நடத்து

   ------------------------------------------------

5. பின்வரும் ஆங்கிலத் தொடரைத் தமிழிலும் தமிழ்த் தொடரை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து எழுதுக.

1. Exercise improves physical and mental health.

   ------------------------------------------------
2. அரசர்கள் நிலத்தைத் தானமாக வழங்கினர்.

   ------------------------------------------------

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. பின்வரும் விளம்பரப் படத்திலிருந்து கேட்கப்படும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.




**வினாக்கள்:**

1. விளம்பர அறிவிப்பு எதனைப் பற்றியது?
2. சிறுவர்களுக்கு நடத்தப்பெறும் போட்டிகள் யாவை?
3. பெரியவர்களுக்கு நடத்தப்பெறும் போட்டிகள் யாவை?
4. விருந்து எவ்வகையில் வழங்கப்படுவதாக விளம்பரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது?
5. எவ்வாறு இணைவோம் என விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

**7. பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி, இயற்கையை வருணித்து ஐந்து தொடர்கள் எழுதுக.**

அழகான – பசுமையான – உயரமான – நீளமான – அடர்ந்த காடுகள் – பூக்கள் – ஆறு – மலை – புல்வெளி

www.Padasalai.Net